**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2017**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்/ எஸ்எல்எவ்ஆர்எஸ்)**

பின்வரும் நியமங்களுடனான விலகல் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) எல்கேஏஎஸ் - 01, நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தினால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் மூலம் வேறு வகையில் அனுமதிக்கப்பட்டால் அன்றி, நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வருமானங்களும் செலவினங்களும் ஒன்றிற்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாத போதிலும் கடன்கொடுத்தோர் கணக்குகள், பெறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணக் கணக்குகள், உப ஒப்பந்ததாரர் கணக்குகள், உப ஒப்பந்ததாரர் பிடிகாசுக் கணக்குகள், அட்டுறு மற்றும் ஏற்பாட்டுக் கணக்குகள் என்பன அந்தக் கணக்குகளின் செலவு மீதிகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தன. ஆகையால் அத்தகைய கணக்குகளின் செலவு மீதிகள் முறையே ரூபா 25,542,855, ரூபா 240,525,285, ரூபா 44,496,625, ரூபா 259,612,535 மற்றும் ரூபா 159,454,338 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) எல்கேஏஎஸ் - 02, இருப்பு**

நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இருப்பானது கிரயம் அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதியில் மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவுப்பொருள் இருப்புக்களின் கிரயம் தேறிய நிகர பெறுமதியின் 90 முதல் 95 வரையான சதவீத வீச்சில் பெறுமதியிடப்பட்டிருந்தது. இதனால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 245,149,766 ஆன முடிவுப்பொருள் இருப்புக்களின் கிரயத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது நம்பிக்கைகொள்ள முடியாதிருந்தது.

**(இ) எல்கேஏஎஸ் - 16, ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த ரூபா 91,671,319 கிரயமான நிலையான சொத்துக்கள் மற்றும் மென்பொருள் என்பன அத்தகைய சொத்துக்களின் பொருளாதார பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமல் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் இலங்கை

கணக்கீட்டு நியமம் - 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொறி மற்றும் இயந்திரங்களை திருத்துவதற்கான ரூபா 5,612,605 மீண்டுவரும் செலவினம் வருமானக் கூற்றிற்கு சாட்டப்படுவதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, நிலையான சொத்துக்களும் மீளாய்வாண்டிற்கான இலாபமும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(iii) ரூபா 3,851,120 தொகையான மோட்டார் வாகனங்களின் திருத்தச் செலவினம் வருமானக் கூற்றிற்கு சாட்டப்படுவதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, நிலையான சொத்துக்களும் மீளாய்வாண்டிற்கான இலாபமும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

**(ஈ) எல்கேஏஎஸ் - 37, ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 முதல் 2016 வரையான காலத்திற்கான பெறுமதி சேர் வரி மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டிற்கான பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினைச் செலுத்தாமை காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் விதிக்கப்பட்ட முறையே ரூபா 121,782,475 ரூபா 2,598,573 மற்றும் ரூபா 162,788 தொகையான தண்டப்பணங்களிற்குரிய ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(ii) இறைவரித் திணைக்களத்தின் வேலைத்தளத்திலுள்ள வாகனத் தரிப்பிடத்திற்கு மின்தூக்கியை (டகைவ) வழங்கியமை தொடர்பாக ரூபா 97,000,000 தொகையை கோரி கூட்டுத்தாபனத்திற்கெதிராக சட்ட வழக்கொன்றை டீசல் எஞ்சினியரிங் மோட்டார் கம்பனி தொடர்ந்திருந்தது. இருப்பினும், இது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மேலும், ஒப ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குனர்களால் ரூபா 83,715,034 இழப்பீட்டினைக் கோரி கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடர்ந்திருந்த 14 வழக்குகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) எல்கேஏஎஸ் - 39, நிதிக்கருவிகள், இனங்காணுதல் மற்றும் அளவீடு செய்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடன் மற்றும் பெறவேண்டியவைகள் காலக்கழிவு கிரய முறையில் அளவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 168,618,915 தொகையான 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வியாபார பெறவேண்டிய மீதி காலக்கழிவிடப்பட்ட கிரய முறையில் அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் அம்மீதிகள் அதிகரித்துக் காட்டப்படுவதற்கான சாத்தியத்தன்மை காணப்படுகின்றது.

(ii) ரூபா 563,887,942 தொகையான 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட பெறவேண்டிய பிடிகாசு மீதி நட்டக்கழிவிற்காக கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் அம்மீதி நியாயப் பெறுமதியில் வெளிக்காட்டப்பட்டிருக் கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வியாபாரக் கடன்பட்டோர், கட்டளை முற்பணக் காசோலை மற்றும் பெறவேண்டிய பிடிகாசு மீதி ஆகிய பேரேட்டுக் கணக்குகளில் முறையே ரூபா 71,646,891, ரூபா 100,954,543 மற்றும் 259,612,534 ஆன வழமைக்கு மாறான செலவு மீதிகள் காணப்பட்டதனால் உரிய கணக்குகளின் பெறுமதிகள் அதே தொகைகளால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) பிடிகாசு மீதான பெறுமதி சேர் வரி அறவீட்டை மீளாய்வாண்டிற்கான பெறவேண்டிய பிடிகாசு கணக்கிற்கு தவறுதலாக வரவு வைத்திருந்தமையால், பெறவேண்டிய பிடிகாசு மீதி ரூபா 5,323,646 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான உள்ளபடியான செயற்திட்ட மதிப்பீட்டுக் கிரயத்தினை கருத்திற்கொள்வதற்குப் பதிலாக மொத்த செயற்திட்டக் கிரயத்தின் 89 சதவீதமாக செயற்திட்டங்களின் மதிப்பீட்டுக் கிரயம் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால், ஆகையால் செயற்திட்ட பூர்த்தியாக்கல் சதவீதம் சரியாக கணிப்பீடு செய்யப்பட்டிருக்காததால் ஆண்டிற்கான இலாபம் மற்றும் திரண்ட இலாபம் என்பன முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன

(ஈ) ரூபா 3,456,829 தொகையான பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டோ அல்லது நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக காட்டப்பட்டோ இருக்கவில்லை. இதன் விளைவாக அதே தொகையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரித்தும் பொறுப்பு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்கான ரூபா 5,279,315 தொகையான செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) அனுப்பப்பட்டோ அல்லது நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக காட்டப்பட்டோ இருக்காததன் விளைவாக அதே தொகையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரித்தும் பொறுப்பு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) தேசிய உபகரண மற்றும் இயந்திரவியல் நிறுவனத்தின் (என்ஈஎம்ஓ) செயற்திட்ட வருமானத்தினை பிழையாக இனங்காணப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 17,136,086 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) சேருவவில ராஜமஹா விஹாரைக்குச் சொந்தமான ரூபா 7.2 மில்லியன் பெறுமதியான காணி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட காணியின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 111.92 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடம் என்ஈஎம்ஓ இற்கு உரித்தாகக் காணப்படாத போதிலும், கட்டிடத்திற்கான ரூபா 4,120,908 தொகையான திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ரூபா 889,908 தொகையான பெறுமானத்தேய்வு என்பன மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஐ) புகையிரதத் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்ட ரூபா 9,304,950 கிரயமான கொங்கிறீட் சிலிப்பர்கள் (concrete slippers) 05 ஆண்டுகளிற்கு மேலாக இருப்புக்களில் காணப்பட்டன. அவற்றின் மீது 25 சதவீதமான ரூபா 2,326,239 நட்டக்கழிவு மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக இருப்புக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) இருப்புக்கான ஏற்பாட்டின் கணப்பீட்டுத் தவறு காரணமாக இருப்புக்கான ஏற்பாடு ரூபா 2,304,544 ஆல் குறைத்தும் இலாபம் அத்தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) தவறான பெறுமதி மதிப்பிடல் காரணமாக ரத்மலான வேலைப்பகுதியில் (343) உள்ள இருப்பின் பெறுமதி ரூபா 1,114,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) சேவைப் பிரிவு மற்றும் விசேட செயற்பாட்டுப் பிரிவு ஆகியவற்றில் 3 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாதுள்ள முறையே ரூபா 31,354,164 மற்றும் ரூபா 3,346,962 கடன்பட்டோர் மீதிகளிற்காக நட்டக்கழிவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஃ) நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, ரூபா 4.26 மில்லியன் பெறுமதியான வாகனம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடங்கியிருக்கவில்லை. அதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(க) கிரயத்தினை தவறுதலாக கணிப்பிட்டிருந்தமை காரணமாக இருப்புக்கள் ரூபா 1,260,672 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(கா) ரூபா 2,417,870 தொகையான விற்பனை செய்ய முடியாத இருப்புக்கள் நட்டக்கழிவு செய்யப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன.

(கி) அசாதாரண மறைப்பெறுமதி மீதிகளை எதிரீடு செய்திருந்தமையின் விளைவாக விற்பனைக் கிரயம் ரூபா 23,759,731 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினதும் என்ஈஎம்ஓ இனதும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள குழுமத்திற்கு இடையிலான மீதிகளிற்கிடையே ரூபா 64,468,337 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளிற்கிடையே ரூபா 216,068,743 வேறுபாடு காணப்பட்டது.

(இ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,328,759 இனங்காணப்படாத வைப்பு மீதி என்ஈஎம்ஓ இனது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளிற்கிடையே ரூபா 2,624,108 வேறுபாடு காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கடன் வட்டிக் கிரயம் மற்றும் மேலதிகப்பற்று ஆகியவற்றிற்கும் உரிய பட்டோலையில் காண்பிக்கப்பட்டிருந்த கடன் வட்டிக் கிரயம் மற்றும் மேலதிகப்பற்று ஆகியவற்றிற்கும் இடையே ரூபா 6,057,203 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் எதிராக சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | செலுத்தவேண்டிய பொருட்கள் சேவைகள் வரி | 9,594,208 | விபரமான பட்டோலைகள் |
| (ஆ) | வாடிக்கையாளருக்குச் செலுத்தவேண்டிய மீதி | 543,921,906 | விபரமான பட்டோலைகள் |
| (இ) | ஏன்ஈஎம்ஓ நிலையான சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு | 118,245,087 | விபரமான பட்டோலைகள் |
| (ஈ) | என்ஈஎம்ஓ இன் வருமானம் | 1,176,639,027 | ஏன்ஈஎம்ஓ இன் இலாபக் கணிப்பீட்டு செயற்திட்ட விபரங்கள் |

**1.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 3,176,933,801 தொகையான மொத்த வியாபரக் கடன்பட்டோரில் 95 சதவீதத்திற்கும் மேற்பட்டவை அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்றன. அவற்றில் ரூபா 1,248,600,741 அல்லது 43 சதவீதமானவை 3 ஆண்டுகளிற்கும் லோக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவைப் பிரிவில் 05 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாது வைத்துள்ள முற்கொடுப்பனவு மீதி ரூபா 1,426,440 ஆகும்.

(இ) ரூபா 303,315,870 மற்றும் ரூபா 563,887,942 தேறிய பிடிகாசு மீதிகள் முறையே 03 மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்பட்டன.

(ஈ) ரூபா 13,734,094 தொகையான வெளிநாட்டுக் கொள்வனவு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி சேவைப் பிரிவில் அறவிடப்படாமல் 2012 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டதுடன் இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவிலுள்ள ரூபா 29,968,288 தொகையான வெளிநாட்டுக் கொள்வனவுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அம்மீதிகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 540,234,948 கூட்டுமொத்தமான கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 14,257,406 தொகை 05 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டன.

(ஊ) செலுத்த வேண்டிய ரூபா 887,178,455 கூட்டுத் தொகையான பெறுமதிசேர் வரி மற்றும் பொருட்கள் சேவைகள் வரி என்பன 2012 முதல் தீர்க்கப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(எ) ரூபா 114,317,463 தொகையான உப ஒப்பந்த தாரர்களிற்குச் வழங்கிய வேலைதொடக்க முற்பணங்கள் 05 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளன.

(ஏ) ரூபா 8,604,796 தொகையான சேவைகளிற்காக வழங்கிய முற்பணங்கள் 05 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளன.

(ஐ) ரூபா 2,010,000 தொகையான வைப்புக்கள் 05 ஆண்டுகளிற்கும் மேலாக வைத்திருக்கப்பட்டுள்ளன.

(ஒ) ரூபா 2,239,501 தொகையான வழங்குனர் முற்பணங்கள் திர்வுசெய்யப்படாது 05 ஆண்டுகளிற்கும் மேலாக வைத்திருக்கப்பட்டுள்ளன.

(ஓ) சேவை நாடுநர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 442,666,325 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டதுடன் அந்த மீதியினை தீர்ப்பதற்காக 2017 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஔ) ரூபா 784,804,346 தொகையான அட்டுறுச் செலவினத்தில் ரூபா 583,144,664 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாது வைக்கப்பட்டுள்ளன.

(ஃ) ரூபா 10,562,151 தொகையான வருமான வரி மீதிகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படாது வைக்கப்பட்டுள்ளன.

(க) ரூபா 197,876,933 தொகையான வாடிக்கையாளர்களிடமிருந்து வருமதியான மீதியும் ரூபா 32,040,246 தொகையான வாடிக்கையாளர்களிற்கு கொடுமதியான மீதியும் 2015 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 48,735,735 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 78,914,988 கூட்டுமொத்தமான பெறுமதி சேர் வரியை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,193,334 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,196,626 கூட்டு மொத்தமான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் தலைவரால் வழங்கப்பட்ட 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய 121/1979 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(இ) ஆம் பிரிவு | கட்டளைகளுடன் சேர்த்து காசோலைகளாக வழங்கப்படுகின்ற முற்பணங்கள் 30 நாட்களிற்குள் தீர்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 46,641,962 தொகையான அத்தகைய முற்பணங்கள் 3 ஆண்டுகளிற்கும் மேலாக கூட்டுத்தாபனத்தில் தீர்க்கப்படாது வைக்கப் பட்டுள்ளன. அத்துடன், ரூபா 8,107,864 தொகையான கட்டளைகளுடன் இணைந்த காசோலை முற்பணங்கள் 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை (என்ஈஎம்ஓ) தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் தலைவரால் வழங்கப்பட்ட 1979 திசெம்பர் 20 ஆந் | பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்காக வழங்கப்படுகின்ற காசு முற்பணங்கள் 14 நாட்களிற்குள் தீர்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 1,935,050 |

| | |
|---|---|
| திகதிய 122/1979 ஆம் இலக்க சுற்றறிக்கை. | மற்றும் ரூபா 4,881,300 தொகையான விசேட காசு முற்பணங்கள் 3 ஆண்டுகளிற்கும் மேலாக முறையே கூட்டுத்தாபனத்திலும் தேசிய உபகரண மற்றும் இயந்திரவியல் நிறுவனத்திலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாது காணப்பட்டன. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 904,479,014 வரிக்கு பின்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 612,714,083 வரிக்கு பின்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டத்தில் ரூபா 291,764,931 குறைவொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் ரூபா 942,964,376 ஆல் அதிகரித்தமை மற்றும் நடப்பு வரியின் பிற்போட்ட வரித் தாக்கம் ரூபா 569,787,951 ஆல் அதிகரித்திருந்தமை என்பன இந்நிலைமைக்கு பங்களித்திருந்த பிரதான காரணங்களாகும்.

#### 2.1.1 கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச்சேர்க்கை

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச் சேர்க்கை விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| | **2017** | **2016** | **2015** | **2014** | **2013** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வரிக்குப் பின்னரான இலாபம் | (612,714,083) | (904,479,014) | (744,581,777) | 74,534,988 | 122,726,033 |
| (+)ஊழியர் நலன் | 286,312,135 | 227,564,599 | 188,769,676 | 165,177,185 | 175,236,245 |
| செலுத்தப்பட்ட வரி - வற் | 121,520,561 | 78,839,708 | 79,009,022 | 154,211,263 | 223,179,026 |
| - ஈஎஸ்சீ | | - | - | - | - |
| - என்பீரீ | 5,276,315 | 7,479,913 | 5,255,365 | 6,870,861 | 7,904,555 |
| பெறுமானத்தேய்வு | 263,477,721 | 252,023,956 | 253,333,230 | 250,696,182 | 131,318,279 |
| கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச் சேர்க்கை | (63,872,649) | (338,570,838) | (218,214,484) | 651,490,479 | 660,364,138 |

கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச்சேர்க்கை 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அதன் பின்னர் இது மீளாய்வாண்டு வரை அசாதாரண எதிர்மறை விளைவுகளாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 2.2.1 இலாபத்தன்மை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டு நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் மிகையொன்று காணப்பட்ட போதிலும் இது 2013 தொடக்கம் மீளாய்வாண்டு வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் 2013 ஆம் ஆண்டின் ரூபா 122,726,033 தொகையான மிகை மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 612,714,083 பற்றாக்குறையாக வந்திருந்தது. விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 3623,607,372 | 2,680,642,996 | 3,168,016,408 | 7,403,418,660 | 7,965,731,512 |
| மொத்த இலாபம் | 839,853,709 | (747,945,689) | (799,394,028) | 195,346,353 | 522,549,676 |
| (-) நிர்வாகச் செலவினம் | (454,152,555) | (423,964,951) | (273,654,573) | (388,165,985) | (424,107,378) |
| செயற்பாட்டு இலாபம்/நட்டம் | (1,294,006,264) | (1,171,910,640) | (1,073,048,601) | (192,819,632) | 98,442,298 |
| (+) ஏனைய வருமானம் | 174,921,742 | 244,566,731 | 426,437,075 | 299,423,834 | 121,717,774 |
| (-) தேறிய நிதிச் செலவினம் | (197,457,199) | (112,768,542) | (62,224,359) | (59,998,458) | (71,587,241) |
| வரிக்கு முன் இலாபம்/நட்டம் | (1,316,541,721) | (1,040,112,451) | (708,835,885) | 46,605,744 | 148,572,831 |
| (-)வரிகள் | 703,827,698 | 135,633,437 | (35,745,892) | 27,929,244 | (25,846,798) |
| வரிக்குப் பின் இலாபம்/நட்டம் | (612,714,083) | (904,479,014) | (744,581,777) | 74,534,988 | 122,726,033 |

**2.2.2 கணக்கீட்டு விகிதங்கள்**

மீளாய்வாண்டிற்கான முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறுள்ளன.

| கணக்கீட்டு விகிதம் | 2016 | 2017 |
|---|---|---|
| | சதவீதம் | சதவீதம் |
| மொத்தலாப விகிதம் | (28) | (23) |
| தேறியலாப விகிதம் | (33.7) | (17) |
| புரள்வு மீதான நிர்வாக செலவினம் | 15.81 | 12.5 |
| புரள்வு மீதான தேறிய நிதி செலவினம் | 4.20 | 5.4 |
| நடைமுறை விகிதம் | 0.94 | 0.81 |
| விரைவு விகிதம் | 0.88 | 0.76 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

(அ) மீளாய்வாண்டில் செயற்படாதிருந்த செயற்திட்டம் ஒன்றிலிருந்து ரூபா 483,138 நட்டம் இனங்காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் என்ஈஎம்ஓ இனால் செயற்பட்டிருந்த நான்கு செயற்திட்டங்களிலிருந்து ரூபா 14,989,641 கூட்டுத்தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 சர்ச்சைக்குரிய தன்மைவாய்ந்த விடயங்கள்**

(அ) ரூபா 784,804,346 தொகையான மொத்த அட்டுறு மீதியிலுள்ள ரூபா 42,324,415 வரவு மீதிகளும் ரூபா 578,351,607 செலவு மீதிகளும் அதற்குரியவர்கள் இனங்காணப்படாது 8303 ஆம் கணக்குக் குறியீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 4,779,030 மொத்தமான கடன்பட்டோர் மீதிகள் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் நட்டக்கழிவாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்தக் கடன்பட்டோர்கள்

மீளாய்வாண்டில் நட்டக்கழிவிற்காக இனங்காணப் படாதிருந்ததுடன், அதற்கான காரணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) ரூபா 1,176,639,027 மொத்தப் பெறுமதியுடைய 62 செயற்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான என்ஈஎம்ஓ இன் இலாபக் கணிப்பீட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதற்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட வசதியினை விஞ்சி ரூபா 49,013,876 வங்கி மேலதிகப்பற்று வசதியினை கூட்டுத்தாபனம் பெற்றுக் கொண்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்காக பெற்றுக் கொண்டிருந்த வங்கி மேலதிகப்பற்று 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 82.9 மில்லியன் அல்லது 12 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.